# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2282/30 - 2022 ජූනි මස 01 වැනි බදාදා - 2022.06.01

2282/30 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு**

மத்தியஸ்தர்களாக நியமிப்பதற்குப் பெயர் குறித்த நியமனங்களைக் கோரும் அறிவித்தல்

வறிதாக்குகின்ற மத்தியஸ்த சபைகளின் 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க மத்தியஸ்த சபைகள் சட்டத்தின் 5(1) ஆம் பிரிவினால் தனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவினால் பின்வரும் மத்தியஸ்தர்கள் குழாத்துக்களுக்காக மத்தியஸ்த சபைகள் சட்டத்தின் 1 ஆம் அட்டவணையின் 6 ஆம் பிரிவிலிருந்து 11 ஆம் பிரிவின் பிரகாரம் பதவிகள் தவிசாளர்கள் மற்றும் மத்தியஸ்தர்களுக்காக மீண்டும் பெயர் குறித்த நியமனங்கள் கோரப்படுகின்றன.

| மாவட்டம் | மத்தியஸ்த சபைப் பிரதேசம் | பதவிக்காலம் முடிவுறும் திகதி |
|---|---|---|
| கம்பஹா | 01. மீரிகம | 2022.04.15 |
| | 02. வத்தளை | 2022.05.15 |
| மாத்தறை | 01. மாலிம்பட | 2022.04.01 |
| ஹம்பாந்தோட்டை | 01. கட்டுவன | 2022.01.01 |
| | 02. தங்காலை | 2022.01.01 |
| | 03. ஹம்பாந்தோட்டை | 2022.01.15 |
| | 04. ஓகேவெல | 2022.06.15 |
| குருநாகல் | 01. வாரியபொல | 2022.04.01 |
| | 02. மல்லவபிட்டிய | 2022.04.01 |
| புத்தளம் | 01. ஆணமடுவ | 2022.01.01 |


1A - PG 5852 — 121 (2022/06)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

| *மாவட்டம்* | *மத்தியஸ்த சபைப் பிரதேசம்* | *பதவிக்காலம் முடிவுறும் திகதி* |
|---|---|---|
| அநுராதபுரம் | 01. நுவரகம் பலாத்த கிழக்கு | 2022.01.01 |
| பதுளை | 01. லுனுகல | 2022.01.01 |
| | 02. ரிதீமாலியத்த | 2022.03.15 |
| | 03. மீகஹகிவுல | 2022.05.15 |
| மொனராகல | 01. புத்தல | 2022.01.15 |
| கேகாலை | 01. கேகாலை | 2022.03.01 |
| | 02. புலத்கொஹூபிட்டிய | 2022.03.15 |
| யாழ்ப்பாணம் | 01. சங்கானை | 2022.01.15 |
| | 02. கரவெட்டி | 2022.01.01 |
| | 03. காரைநகர் | 2022.01.01 |
| அம்பாறை | 01. இறக்காமம் | 2022.01.15 |
| | 02. கல்முனை | 2022.01.15 |
| | 03. சாய்ந்தமருது | 2022.01.15 |
| | 04. லாஹூகல | 2022.02.15 |
| திருகோணமலை | 01. கிண்ணியா | 2022.06.15 |
| | 02. மூதூர் | 2022.06.15 |
| வவுனியா | 01. வவுனியா | 2022.01.15 |
| | 02. வவுனியா வடக்கு | 2022.06.01 |
| மன்னார் | 01. மன்னார் | 2022.01.01 |
| | 02. மடு | 2022.01.15 |
| | 03. முசலி | 2022.06.01 |

02. அந்த மத்தியஸ்த பிரதேசத்தின் மத்தியஸ்தர்களின் குழாத்துக்கு மத்தியஸ்தர்களை நியமிப்பதற்காக, தகைமையுடைய ஆட்களின் பெயர்களைச் சமர்ப்பிக்குமாறு இதனகத்துக் குறிப்பிடப்பட்டுள்ள (அ) தனியாட்களையும் (ஆ) அரசியல் சார்பற்ற குழுக்களையும் ஒழுங்கமைப்புக்களையும் (இ) மாவட்ட செயலாளர்களையும் பிரதேச செயலாளர்களையும் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு இத்தால் கேட்டுக்கொள்கிறது.

(அ) குறிப்பிடப்பட்ட ஒரு மத்தியஸ்த சபை இடப்பரப்பின் குழாத்திற்குத் தனது சொந்தப் பெயர் நீங்கலாகப் பெயர் குறித்த நியமனங்களைச் செய்வதற்குப் பின்வரும் தனியாட்கள் உரித்துடையவர்களாவார்கள்.

(i) குறிப்பிட்ட அம்மத்தியஸ்த சபை இடப்பரப்பு எந்த நிருவாக மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்த நிருவாக மாவட்டத்தினுள் இருக்கும் ஓர் அலுவலகத்தில் திணைக்களத் தலைவராக அல்லது உள்ளூர் திணைக்களத் தலைவராகச் சேவையாற்றும் ஒரு பகிரங்க அலுவலர் அல்லது மாகாணப் பகிரங்க அலுவலர்:

(ii) குறிப்பிட்ட அம்மத்தியஸ்த சபை இடப்பரப்பில் இருக்கும் ஒரு பாடசாலையின் அல்லது சமய வழிபாட்டுத் தளம் ஒன்றின் தலைவர்:

(iii) குறிப்பிட்ட அம்மத்தியஸ்த சபை இடப்பரப்பில் வசிக்கும் ஓய்வு பெற்ற ஒரு திணைக்களத் தலைவர் அல்லது ஓய்வு பெற்ற ஒரு பாடசாலைத் தலைவர்:

(iv) மத்தியஸ்த குழாத்தின் தவிசாளர்.

(ஆ) ஏதேனும் மத்தியஸ்த சபை இடப்பரப்பின் குழாத்திற்குப் பெயர் குறித்த நியமனங்களைச் செய்வதற்குப் பின்வரும் குழுக்கள், ஒழுங்கமைப்புக்கள், நிறுவனங்கள் உரித்துடையனவாகும்:-

(i) ஆகக்குறைந்தது ஐந்தாண்டுகளுக்காவது உளதாயிருந்துள்ளதும் கீழே கூறப்பட்ட குறிக்கோள்களுள் ஏதேனும் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றை நிறைவேற்றுவதில் அல்லது அதற்கு அல்லது அவற்றுக்குச் சேவையாற்றுவதில் ஈடுபட்டுள்ளதுமான ஏதேனும் குழு ஒழுங்கமைப்பு அல்லது நிறுவனம்-

(அ) சமூகத்தின் கல்வி, சமய, ஒழுக்க அல்லது ஆன்மீக முன்னேற்றத்திற்கான மேம்படுத்தல் :
(அ) சமூக நலன்புரி மற்றும் வறுமை நிவாரண மேம்படுத்தல் :
(இ) கிராமிய அல்லது சமுதாய அபிவிருத்தியை மேம்படுத்தல் :
(ஈ) பண்பாட்டையும் விளையாட்டுக்களையும் மேம்படுத்தல் :
(உ) சுகாதாரம், உணவு, வாழிடம் போன்ற மக்களின் அடிப்படைத் தேவைகளை ஏற்பாடு செய்து வழங்குவதற்குக் கருதப்பட்ட கருத்திட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் செயற்பாடுகயையும் மேம்படுத்தல்.

(இ) குறிப்பிட்ட ஒரு மத்தியஸ்த சபை இடப்பரப்பின் குழாத்திற்குப் பெயர் குறித்த நியமனங்களைச் செய்வதற்கு மாவட்டச் செயலாளர் பிரதேச செயலாளர் உரித்துடையவராவார்-

(i) அம்மத்தியஸ்த சபை எந்த நிருவாக மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அந்த நிருவாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர்/ பிரதேச செயலாளர்.

(ii) ஏதேனும் மத்தியஸ்த சபை இடப்பரப்புக்கு, அதிகார சபைக்கு பின்வரும் நபர்கள் மாத்திரமே நியமனம் பெறுவதற்கு உரித்துடையவர்கள் ஆகையால், அவர்களது பெயர்கள் மாத்திரம் நியமனத்திற்காக முன்மொழியப்பட வேண்டும். அவ்வாறாயின்,

(அ) அத்தகைய மத்தியஸ்த சபை இடப்பரப்பில் வதிகின்ற அல்லது அவ்விடப்பரப்பில் ஏதேனும் வேலையில் ஈடுபடுகின்ற எவரேனுமாள் :

(ஆ) விதிவிலக்கான சூழ்நிலைகளில் ஆணைக்குழு அவ்வாறு முடிவுசெய்கின்ற, அத்தகைய மத்தியஸ்த சபை இடப்பரப்புக்கு வெளியே வருகின்ற அந்நியமிக்கப்பட்ட ஏதேனும் பகிரங்க அலுவலர், அந்த நிருவாக மாவட்டத்தினுள் உள்ள ஒவ்வொரு அல்லது ஏதேனும் சேவையில் ஈடுபடுகின்ற எவரேனுமாள் : அத்துடன்

(இ) அத்தகைய மத்தியஸ்த சபை இடப்பரப்பில் அந்த நிருவாக மாவட்டத்தினுள் மாவட்டச் செயலாளரினால் /பிரதேச செயலாளரினால் பெயர் குறித்து மத்தியஸ்த சபை இடப்பரப்புக்கும் நியமிக்கப்பட்ட மத்தியஸ்தர்கள் குழாத்துக்கு நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்:

(ஈ) பதவியில் மூன்று வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளவர்களும் பதவியினின்றும் ஓய்வுபெற விருப்பமானவர்களுக்குமான மத்தியஸ்தர்கள் குழாங்களின் தற்போதைய தவிசாளர்.

(உ) ஏலவே மத்தியஸ்த சபை உறுப்பினராக இருப்பவர்கள் தவிர்த்து புதிதாக தெரிவு செய்யப்படுகின்ற உறுப்பினர்களுக்கு க.பொ.த (சா./ த.) சித்தி அல்லது அதற்கு சமமான வேறு கல்வித் தகமையோ எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஊ) தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள மத்தியஸ்தர்கள் தவிர புதியவர்களின் வயது ஆகக் குறைந்தது 35 வருடங்கள் விஞ்சப்பட்டிருத்தல் வேண்டும்.

(v) அரசாங்க அல்லது அரை அரசாங்க அல்லது தனியார் துறையின் நிதி நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட வங்கிகள், குத்தகை, நுண்நிதிக் கடன் மற்றும் காப்புறுதிச் சேவையிலுள்ள நிறுவனங்களில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள ஆட்களின் பெயர்குறித்த நியமனங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

03. (அ) மேலே (2) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தனியாட்கள், சபைகள், ஒழுங்கமைப்புக்கள், நிறுவனங்கள் என்பனவற்றினால் (2) (அ) ஆம், (2) (ஆ) ஆம் பந்திகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள பகிரங்க அலுவலர்களின் பெயர்களைச் சமர்ப்பித்தல் முடியும். தனியார் ஒருவர் தன்னைத்தானே பெயர் குறித்து நியமிக்க உரித்துடையவரல்லர்.

(அ) மேலுள்ள பந்தி (2) (இ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட அரசாங்க அதிபர்கள், பகிரங்க அலுவலர்களின் பெயர் குறித்த நியமனங்களைச் சமர்ப்பிக்கலாம். இவர்களுள் ஐந்திற்கு மேற்படாதவர்களை இயைபான மத்தியஸ்தர்கள் குழாத்திற்கு ஆணைக்குழு நியமிக்கலாம்.

04. பெயர் குறித்த நியமனங்கள் செய்யும் படிவம்-

(அ) தனியாட்கள் பொருளளவில் கீழேயுள்ள படிவம் 'அ' இல் பெயர் குறித்த நியமனங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

(ஆ) குழுக்கள், ஒழுங்கமைப்புக்கள், நிறுவனங்கள் என்பன பெருமளவில் கீழேயுள்ள படிவம் ''ஆ'' இல் பெயர் குறித்த நியமனங்களைச் செய்ய வேண்டும்.

(இ) மாவட்டச் செயலாளர் /பிரதேச செயலாளர்கள் பொருளளவில் கீழேயுள்ள படிவம் "இ" இல் பெயர் குறித்த நியமனங்களைச் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு பெயர் குறித்த நியமனமும் வெவ்வேறு படிவத்தில் இருக்க வேண்டுமென்பதுடன் அடுத்த பந்தியில் காட்டப்பட்டவாறு பெயர் குறித்த நியமனங்களின் விதப்புரையையும் அது தவறாது கொண்டிருத்தல் வேண்டும்.

05. பெயர் குறித்து நியமிப்பவரின் விதப்புரை காரணங்கள் இல்லாத வெறும் விதப்புரையாக இருத்தலாகாது. மத்தியஸ்தர் குழாத்திற்கு நியமிக்கப்படுவதற்காகப் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆளின் தகுதி அல்லது வேறு விடயங்கள், உதாரணமாக அவர்களுடைய தற்போதைய அல்லது கடந்த காலத் தொழில், சேவையாற்றிய அல்லது ஈடுபட்டிருந்த காலப்பகுதி அவரால் வகிக்கப்பட்ட ஏதேனும் நம்பிக்கை, அல்லது பொறுப்பு நிலை அத்துடன் ஏதேனும் சமூக சேவை/சமய/தர்ம ஒழுங்கமைப்பில், சங்கத்தின் அல்லது குழுவில் அவரால் வகிக்கப்பட்ட ஏதேனும் பதவி குறித்து ஆணைக்குழு அதன் சொந்த ஊகிப்புக்களைப் பெறுவதற்கேதுவாக குறித்த நிகழ்வுகளையும், சூழ்நிலைகளையும் அது குறிப்பிட வேண்டும்.

06. அதே மத்தியஸ்த சபை இடப்பரப்புக்கு மூன்றுக்கு மேற்பட்ட குறித்த நியமனங்களைச் செய்வதைக் கூடியவரையில் ஒரு தனியார் அல்லது ஒரு குழு, ஒழுங்கமைப்பு அல்லது நிறுவனம் தவிர்த்துக்கொள்ள வேண்டும். என்றாலும் தற்போதிருக்கும் மத்தியஸ்த குழாத்துத் தவிசாளருக்கும் மாவட்டச் செயலாளர்/பிரதேச செயலாளருக்கும் இவ்வெல்லை ஏற்புடையதாகாது.

07. பெயர் குறித்த நியமனங்கள் அனைத்தும் 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன் "செயலாளர், மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு, இல : 80, நீதி அமைச்சின் புதிய கட்டிடம், நீதிமன்ற வீதி, கொழும்பு 12", என்ற விலாசத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

08. நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தகமைகளை பரீட்சித்துப் பார்க்கப்பட்டதன் பின்னர் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவினால் மத்தியஸ்த திறமைகள் மற்றும் முறைகள் பற்றிய முதனிலை பயிற்சி கற்கை நெறியொன்றை கற்பதற்கு தகுதியுடையவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

09. இவ் அறிவித்தலில் நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகள் தவிர்ந்த ஏனைய விடயங்கள் தொடர்பாக மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானம் ஆகும்.

ரீ. டீ. என். டீ கம்முனகே,
செயலாளர்,
மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு.

மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு அலுவலகம்.
இல:80,
நீதி அமைச்சின் புதிய கட்டிடம்,
நீதிமன்ற வீதி,
கொழும்பு 12,
27.05.2022

EOG 06-0023

படிவம் "அ"

(பெயர் குறித்த நியமனங்களைச் சமர்ப்பிப்பதற்குத் தகவுடைய தனியாட்களால் நிரப்பப்பட வேண்டியது)

1. மத்தியஸ்த சபை இடப்பரப்பு (பிரதேச செயலக பிரிவு) :-.............................................
2. நிருவாக மாவட்டம் :-..........................................................................................
3. பெயர் குறித்த நியமனத்தைச் சமர்ப்பிக்கும் தனியாட்களின் விபரங்கள் :-

(அ) உமது முழுப் பெயர் :-................................................................................
(அ) உமது வதிவிட தபால் முகவரி :-..........................................................
(இ) பெயர் குறித்த நியமனத்தைச் சமர்ப்பிப்பதற்கான உமது தகைமை :-.....................

(i) நீர் ஒரு திணைக்களத் தலைவரா? அவ்வாறாயின் அவற்றைக் குறிப்பிடவும்

அவ்வாறாயின் திணைக்களப் பெயர் :-...................................................................
அலுவலக முகவரி :-..............................................................................................
நீர் வகித்த பதவி :-................................................................................................

(ii) நீர் ஒரு வணக்கத் தலத்தின் தலைவரா? அல்லது உள்ளூர் திணைக்களத் தலைவரா? அல்லது பாடசாலைத் தலைவரா? அவ்வாறாயின் அவற்றைக் குறிப்பிடவும்.

அவ்வாறரயின் அதன் பெயர் :-.................................................................................
முகவரி :- .................................................................................................................
நீர் வகிக்க்கும் பதவி :-...........................................................................................

(iii) நீர் ஒரு ஓய்வு பெற்ற திணைக்களத் தலைவரா ? அல்லது ஓய்வு பெற்ற பாடசாலைத் தலைவரா? அவ்வாறாயின் அவற்றைக் குறிப்பிடவும்.

அவ்வாறரயின் அந்நிறுவனத்தின் பெயர் :-...............................................................
நீர் கடைசியாக வகித்த பதவி :-............................................................................
நீர் வசித்திருக்கும் மத்தியஸ்த சபை இடப்பரப்பு :-.................................................

4. உம்மால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஆளின் விபரங்கள் :-

(அ) அவருடைய முழுப் பெயர் :-.....................................................................................
(ஆ) அவருடைய வதிவிட தபால் முகவரி :-....................................................................
(இ) பிறந்த திகதி :-..........................................................................................................
(ஈ) தேசிய அடையாள அட்டை இல. :-...........................................................................
(உ) தொலைபேசி இல. :-...................................................................................................
(ஊ)மேற்குறிப்பிட்ட மத்தியஸ்த சபை இடப்பரப்பில் அவர் வசிப்பவரா? இல்லையெனில் மத்தியஸ்த சபை இடப்பரப்புக்கு வெளியில் வசிப்பவரா? :-................................................
(எ) இம் மத்தியஸ்த சபை இடப்பரப்பினுள் அவர் ஏதேனும் வேலையில் ஈடுபட்டுள்ளாரா? அப் பிரதேசத்திற்கு வெளியில் தொழில் செய்பவரா? :-...................................................................
(ஏ) அவர் ஒரு பகிரங்க அலுவலரா?
அவ்வாறாயின் அவர் வகிக்கும் பதவி :-...................................................................................
(ஐ) உமது விதப்புரையை அதற்கான காரணங்களுடன் தருக :- ................................................

................................................................
கையொப்பம்
(இலச்சினை இருப்பின்)

திகதி :

படிவம் "ஆ"

(பெயர் குறித்த நியமனங்களைச் செய்வதற்குத் தகவுடைய குழுவின், ஒழுங்கமைப்பின், நிறுவனத்தின் செயலாளரால் நிரப்பப்பட வேண்டியது)

1. மத்தியஸ்த சபை இடப்பரப்பு :-....................................................................................
2. நிருவாக மாவட்டம் :-...................................................................................................
3. பெயர் குறித்த நியமனத்தைச் சமர்ப்பிக்கும் குழுவின், ஒழுங்கமைப்பின் அல்லது நிறுவனத்தின் விபரங்கள் :-

(அ) அதன் பெயர் :-...........................................................................................................
(ஆ) அதன் பதிவு /அலுவலக விலாசம் :-...................................................................................
(இ) அது பதிவு செய்யப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட தேதி :-............................................
(ஈ) அது உளதாயிருக்கும் காலம் :-..........................................................................................
(உ) அது நிறைவேற்ற அல்லது சேவையாற்ற ஈடுபட்டுள்ள நோக்கங்கள் :-..............................

4. பெயர் குறித்து நியமிக்கப்படும் ஆளின் விபரங்கள் :-

(அ) அவருடைய முழுப் பெயர் :-......................................................................................................
(அ) அவருடைய வதிவிட தபால் முகவரி :-..................................................................................
(இ) பிறந்த திகதி :-..........................................................................................................................
(ஈ) தேசிய ஆளடையாள அட்டை இல :-........................................................................................
(உ) தொலைபேசி இல :- ..................................................................................................................
(ஊ) மேற்குறிப்பிட்ட மத்தியஸ்த சபை இடப்பரப்பில் அவர் வசிப்பவரா? :-.............................
(எ) இம் மத்தியஸ்த சபை இடப்பரப்பினுள் அவர் ஏதேனும் வேலையில் ஈடுபட்டுள்ளாரா?:- ...................................................
.........................................................................................................
(ஏ) அவர் ஒரு பகிரங்க அலுவலரா?
அவ்வாறாயின் அவர் வகிக்கும் பதவி :- ..............................................................................

5. அவருடைய பெயர் குறித்த நியமனத்திற்கு அதிகாரமளிக்கும் தீர்மானமொன்றைக் குழு, ஒழுங்கமைப்பு அல்லது நிறுவனம் நிறைவேற்றியுள்ளதா? அவ்வாறாயின், அத்தீர்மானத் தேதி :-.......................................................................................................
........................................

6. குழு, ஒழுங்கமைப்பு அல்லது நிறுவனத்தின் விதப்புரை அதற்கான காரணங்களுடன் :- ...................................................................
....................................................................................

...................................................................
செயலாளரின் கையொப்பம்
(சபை, அமைப்பு அல்லது நிறுவனத்தின் இலச்சினை)

திகதி :-.................................

படிவம் "இ"

(பெயர் குறித்த நியமனங்களைச் சமர்ப்பிப்பதற்குத் தகவுடைய அரசாங்க அதிபரால் / பிரதேச செயலாளரால் நிரப்பப்பட வேண்டியது)

1. மத்தியஸ்த சபை இடப்பரப்பு :-.......................................................................................

2. நிருவாக மாவட்டம் :-.....................................................................................................

3. பெயர் குறித்த நியமனத்தைச் சமர்ப்பிக்கும் அரசாங்க அதிபரின் /பிரதேச செயலாளரின் விபரங்கள்:-

(அ) உமது முழுப்பெயர் :-.....................................................................................................
(அ) உமது அலுவலக விலாசம் :-.........................................................................................
(இ) நீர் அரசாங்க அதிபராக /பிரதேச செயலாளராக இருக்கும் நிர்வாக மாவட்டம் :-..........................................................

4. பெயர் குறித்த நியமிக்கப்படும் அலுவலரின் விபரங்கள் :-

(அ) அவருடைய முழுப்பெயர் :-.........................................................................................
(அ) அவர் ஒரு பகிரங்க அலுவலரா? அவ்வாறாயின் அவர் வகிக்கும் பதவி::-.............................
(இ) பிறந்த திகதி :-..............................................................................................................
(ஈ) தேசிய அடையாள அட்டை இல. :-.................................................................................
(உ) தொலைபேசி இல. :-......................................................................................................
(ஊ) அவருடைய அலுவலக விலாசம்/வதிவிட தபால் முகவரி :-.................................................

5. உமது விதப்புரை அதற்கான காரணங்களுடன் :- .........................................................................

................................................................
கையொப்பம்
(இலச்சினை)

திகதி :-.................................

EOG 06-0023